செ.வெ.எண்.167 நாள் : 14.12.2016

# ‘‘வர்தா’’ புயலை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

‘‘வர்தா’’ புயலை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் ஆய்வுக்கூட்டம் இன்று (14.12.2016) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவிக்கையில், மாண்புமிகு மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படியும், ஆலோசனையின்படியும், வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு இந்திய ஆட்சிப் பணியாளர்கள் நிலையில் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை அலுவலர்கள் நியமிக்கப்பட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதனடிப்படையில், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் கால்வாய்கள் தூர்வாரப்பட்டு மழைநீர் எளிதில் வெளியேறும் வண்ணம் வழிவகை செய்யப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் (13.12.2016 அன்று) சேகரிக்கப்பட்ட குப்பையை லாரிகளில் பெருங்குடி குப்பைக் கிடங்கிற்கு 168 முறைகள் (Trip) மூலம் 1084.20 டன்களும், கொடுங்கையூர் குப்பைக் கிடங்கிற்கு 193 முறைகள் மூலம் 1438.01 டன்களும், மண்டலம்–1ல் 30 முறைகள் மூலம் 150.00 டன்களும் மொத்தம் 391 முறைகள் மூலம் 2672.21 டன் குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் மீட்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பணிகள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் கண்காணிப்பில், இந்திய ஆட்சிப் பணியாளர்களின் தலைமையில் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை விரைந்து முடித்திட அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆலோசனைகள் நடத்தி பல்வேறு இடங்களில் ஆய்வுகள் மேற்கொண்டு மீட்புப் பணிகளை துரிதப்படுத்திட ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

மீட்பு நடவடிக்கைக்கு தேவையான உபகரணங்கள் இருப்பில் உள்ளன. மேலும் தேவைப்பட்டால் உபகரணங்களை பிற மாவட்டங்களிலிருந்து கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து நிலை அலுவலர்களும் திட்டமிட்டு துரிதமாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னையை கடந்த (12.12.2016) அன்று தாக்கிய ''வர்தா'' புயல் 120–130 கி.மீ. வேகத்தில் சென்னையில் கரையைக் கடந்தது. ''வர்தா'' புயல் காரணமாக சாலையோரம் மற்றும் அலுவலக வளாகங்களில் 10,682 மரங்கள் விழுந்தன என இதுவரை கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் 5,439 மரங்கள் அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள மரங்களை அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பேருந்து சாலைகளில் உள்ள அனைத்து மரங்களும் வெட்டப்பட்டு சாலையின் ஓரத்தில் தள்ளப்பட்டு போக்குவரத்திற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சாலையில் விழுந்த மரங்களை அகற்றிட பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிற மாவட்டங்களிடமிருந்து வரவழைக்கப்பட்ட 295 மர அறுவை இயந்திரங்கள், 181 ஜே.சி.பி இயந்திரங்கள் மற்றும் 269 லாரிகளைக் கொண்டு போர்க்கால அடிப்படையில் 18000 பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள், 1983 பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பணியாளர்கள் என மொத்தம் 19,983 பணியாளர்கள் மரங்களை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுமக்களுக்கு மழைக்காலங்களில் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் பரவாமல் தடுத்திட 51 இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் 25 நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு, தற்போதுள்ள 1,010 நபர்கள் உட்பட, இன்று (14.12.2016) வரை காலை 40,567, மதியம் 27,707, இரவு 37635 உணவு பொட்டலங்கள் என மொத்தம் 12.12.2016 முதல் இன்று (14.12.2016) வரை மொத்தம் 1,05,909 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மாண்புமிகு மின்சாரம் மற்றும் மதுவிலக்குத்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் தெரிவிக்கையில், மின்சார வாரியத்தின் மின்மாற்றி (Transformer) மற்றும் மின் இணைப்பு பெட்டியின் (Junction Box) மீது விழுந்த மரங்கள் அகற்றப்பட்டதனால், சென்னை நகர்ப்புற பகுதிகளில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. புறநகர் பகுதிகளில் 10000க்கும் மேற்பட்ட மின்

கம்பங்கள், 40க்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளன. இதனை சீர்செய்திட பெருநகர சென்னை மாநகராட்சியைச் சார்ந்த 6000 ஊழியர்கள் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 3000 ஊழியர்கள் என மொத்தம் 9000 ஊழியர்கள் போர்க்கால அடிப்படையில் மின்விநியோகத்தினை சீர்செய்திட பணியாற்றி வருகிறார்கள். மிகவிரைவில் மின் விநியோகம் சீர்செய்யப்படும்.

பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிப்பதில் மின் துண்டிப்பால் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக நீரேற்றங்களில் மின்னாக்கிகளை பயன்படுத்திட அறிவுரை வழங்கப்பட்டு சுகாதாரமான குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் தெரிவிக்கையில், கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களின் மீன்பிடி கண்ணாடி இழைப் படகுகள், கட்டுமரம், மீன்பிடி பண்ணைகளின் சேதம் மற்றும் மீன்பிடி வலைகள் சேதம் குறித்தும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அனைத்து அலுவர்களையும் ஒருங்கிணைத்து மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மீட்புப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு எவ்வித பாதிப்பும் இன்றி இயல்பு நிலை திரும்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனைத்து பொதுமக்களும் இதற்கு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என தெரிவித்தார்.

ஆய்வுக்கூட்டத்தில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.உடுமலை இராதாகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் மற்றும் மின்சார வாரியம் உட்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**